# Deposition of Witness
## (Chapter XXIII Code of Criminal Procedure )
## In the Court of Judicial Magistrate No.III Cuddalore.

| | |
|---|---|
| Case Number | : C.C.No. 24/2015 |
| Police Station | : Thiruppapuliyur |
| Deposition of witness for Prosecution | : LW7 / PW8 |
| Name | : தேவேந்திரன் |
| Father Name/Husband Name | : பத்மநாபன் |
| Village | : |
| Cuddalore | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 விதிமுறைகளின் படி 15.11.2022 நாளாகிய இன்று திரு. ஜி. இரகோத்தமன், M.A.,L.L.B., நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.3, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதன்மை விசாரணை**

1. நான் தற்போது அரியாங்குப்பத்தில் வசித்து வருகிறேன். நான் பாண்டிச்சேரியில் உள்ள தனியார் கம்பெனியில் சேல்ஸ்மேனாக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்துபோன ஓம்சக்திவேல் எனது மாமன் மகன் ஆவார். கடந்த 14.08.2013 ம் தேதி மாலை 06.30 மணியளவில் எனது மாமன் மகனான ஓம்சக்திவேல் அவரது நண்பர்களுடன் ரியல் எஸ்டேட் தொடர்பாக காரைக்கால் சென்றுவிட்டு கடலூரில் உள்ள மோகினி பாலம் அருகே வந்தபோது எதிரே வந்த அரசு பேருந்து மோதியதால் எனது மாமன் மகன் ஓம்சக்திவேல் அடிப்பட்டு கடலூர் அரசு மருத்துவமனையில் சவக்கிடங்கில் இருப்பதாக கேள்விப்பட்டு நான் மருத்துவமனை சென்று பார்த்தேன்.

2. பிறகு 15.08.2013 ம் தேதி காலை 09.00 – 10.30 மணியளவில் பஞ்சாயத்தார் மற்றும் சாட்சிகளின் முன்னிலையில் சவக்கிடங்கில் இருந்த எனது மாமன் மகன் பிரேதத்தின் மீது போலிசார் பிரேத விசாரணை செய்தார்கள். அப்போது நான் உடனிருந்தேன். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை என்று கூறப்பட்டது.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

Taken down by me Certified that contains a true and correct statement made by the Accused read over and admitted by the / him to the correct.

Sd- G. Ragothaman, M.A.L.L.B.,
Judicial Magistrate No.III,
Cuddalore.

# Deposition of Witness
## (Chapter XXIII Code of Criminal Procedure )
## In the Court of Judicial Magistrate No.III Cuddalore.

| | |
|---|---|
| Case Number | : C.C.No. 24/2015 |
| Police Station | : Thiruppapuliyur |
| Deposition of witness for Prosecution | : LW10 / PW9 |
| Name | : வெற்றிமணவாளன் |
| Father Name/Husband Name | : நித்தியானந்தன் |
| Village | : |
| Cuddalore | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 விதிமுறைகளின் படி 15.11.2022 நாளாகிய இன்று திரு. ஜி. இரகோத்தமன், M.A.,L.L.B., நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.3, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதன்மை விசாரணை**

1. நான் தற்போது தேவனாம்பட்டினத்தில் வசித்து வருகிறேன். நான் பெயிண்டிங் வேலை செய்து வருகிறேன். பார்வை மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். கடந்த 2013 ம் வருடம் ஒரு நாள் தேதி தெரியவில்லை. காலை 07.00 மணியளவில் நானும் எனது நண்பரான குமரனும் பெயிண்டிங் வேலை செய்வதற்காக கடலூர் மோகினி பாலம் வழியாக சென்றபோது திருப்பாப்புலியூர் போலிசார் விபத்து நடந்த இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடமும், பார்வை மகசரும் தயார் செய்தார்கள். அதில் சாட்சியாக நானும், குமரனும் கையெழுத்து போட்டோம். **( 15.08.2013 தேதியிட்ட பார்வை மகசர் அ.சா.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இவ்வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

2. சம்பவ இடத்தை நான் பார்க்கவில்லை. படம் வரைந்ததை மட்டும் தான் பார்த்தேன். நான் பெயிண்டிங் வேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்து போன ஓம்சக்திவேல் எனக்கு உறவினர் என்பதால் நான் அவருக்கு அனுசரணையாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்தில் கையொப்பம் செய்யவில்லை என்றாலும், காவல் நிலையத்தில் வெள்ளைப்பேப்பரில் கையொப்பம் செய்தேன் என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

Taken down by me Certified that contains a true and correct statement made by the Accused read over and admitted by the / him to the correct.

Sd- G. Ragothaman, M.A.L.L.B.,
Judicial Magistrate No.III,
Cuddalore.

**Deposition of Witness**
**(Chapter XXIII Code of Criminal Procedure )**
**In the Court of Judicial Magistrate No.III Cuddalore.**

| | |
|---|---|
| Case Number | : C.C.No. 24/2015 |
| Police Station | : Thiruppapuliyur |
| Deposition of witness for Prosecution | : LW11 / PW10 |
| Name | : குமரன் |
| Father Name/Husband Name | : ரங்கநாதன் |
| Village | : |
| Cuddalore | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 விதிமுறைகளின் படி 15.11.2022 நாளாகிய இன்று திரு. ஜி. இரகோத்தமன், M.A.,L.L.B., நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.3, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதன்மை விசாரணை**

**1.** நான் தற்போது தேவனாம்பட்டினத்தில் வசித்து வருகிறேன். நான் பெயிண்டிங் வேலை செய்து வருகிறேன். பார்வை மகசரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். கடந்த 2013 ம் வருடம் ஒரு நாள் தேதி தெரியவில்லை. காலை 07.00 மணியளவில் நானும் எனது நண்பரான வெற்றிமணவாளனும் பெயிண்டிங் வேலை செய்வதற்காக கடலூர் மோகினி பாலம் வழியாக சென்றபோது திருப்பாப்புலியூர் போலிசார் விபத்து நடந்த இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடமும், பார்வை மகசரும தயார் செய்தார்கள். அதில் சாட்சியாக நானும், வெற்றிமணவாளனும் கையெழுத்து போட்டோம். இவ்வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**2.** சம்பவ இடத்தை நான் பார்க்கவில்லை. படம் வரைந்ததை மட்டும் தான் பார்த்தேன். நான் பெயிண்டிங் வேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்து போன ஓம்சக்திவேல் எனக்கு உறவினர் என்பதால் நான் அவருக்கு அனுசரணையாக

சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்தில் கையொப்பம் செய்யவில்லை என்றாலும், காவல் நிலையத்தில் வெள்ளைப்பேப்பரில் கையொப்பம் செய்தேன் என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

Taken down by me Certified that contains a true and correct statement made by the Accused read over and admitted by the / him to the correct.

Sd- G. Ragothaman, M.A.L.L.B.,
Judicial Magistrate No.III,
Cuddalore.